உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.603/2023

| | |
|---|---|
| பெயர் | : ஜான்சன்(அ.சா.5) |
| தகப்பனார் பெயர் | :ஜெயசுந்தர் |
| கணவர் பெயர் | : |
| வயது | :39 |
| கிராமம் | :சொக்கலிங்கபுரம் |
| வட்டம் | :மேலூர் |
| தொழில் | :கூலிவேலை |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

16.07.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிக்கும், அவருடைய மனைவி ரம்ஜான் பேகத்திற்கும் இடையே கடந்த 2011ம் ஆண்டு சண்டை நடந்தது தொடர்பாக காவல்துறையினர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தது தெரியுமா என்றால் தெரியாது. சாட்சியிடம் பார்வை மகஜர் காட்டப்பட்டு அதில் உள்ள 2வது கையெழுத்து தன்னுடையது தான் என்று ஒப்புகொள்ளவே அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சியிடம் கைப்பற்றுதல் அத்தாட்சி காட்டப்பட்டு அதில் உள்ள 2வது கையெழுத்து தன்னுடையது தான் என்று ஒப்புகொள்ளவே அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

கடந்த 27.08.2011ம் தேதி நானும், முருகேசனும், சம்பவ இடத்தில் காவல்ஆய்வாளர் குற்ற வழக்கு சம்பந்தமாக பார்வை மகஜர் தயாரித்த போது பார்வைமகஜரில் நானும், முருகேசனும் கையெழுத்திட்டுவிட்டு, சம்பவ இடத்தில் சான்று பொருள் கத்தியும் கைப்பற்றியபோது, அந்த கைப்பற்றுதல் அத்தாட்சியில் நானும், முருகேசனும் கையெழுத்திட்டுவிட்டு, தற்போது ஆஜர் எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சியிடம் கத்தி ஒன்று காட்டப்பட்டு சாட்சி அதை நான் சரியாக பார்க்கவில்லை என்று மறுக்கிறார். சாட்சியிடம் ரம்ஜான்பேகம் சம்பவத்தன்று உடுத்தியிருந்த சேலை மற்றும் ரவிக்கை காட்டப்பட்டு அதை பற்றி தனக்கு தெரியாது என்று சாட்சி மறுக்கிறார். மேற்படி பொருட்களை நானும், முருகேசன் இருக்கும் போது கைப்பற்றப்பட்டது என்றும், அது எனக்கு நன்கு தெரிந்திருந்தும் ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.07.16 20:34:56 +0530

Assistant Sessions Judge

Melur